புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

FORUM FOR MICRO & SMALL ENTERPRISES
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
சுயதொழில் மன்றம்
ISO 9001 : 2008 Certified

KAMARAJ COLLEGE
THOOTHUKUDI - 628003

# ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - கருத்தரங்கம் - தூத்துக்குடி

# EXPORT & IMPORT -BUSINESS OPPORTUNITIES - SEMINAR - THOOTHUKUDI

## நாள்: 25, பிப்ரவரி 2018 - ஞாயிற்றுக்கிழமை

### காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

### இடம்: காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி






புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றம் மற்றும் காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி இணைந்து ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த ஒருநாள் கருத்தரங்கத்தினை பிப்ரவரி 25, 2018 அன்று தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் நடத்தியது.

காலை 10.00 மணி அளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி துவங்கியது. பொ.கணேசன், மண்டல மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை, தூத்துக்குடி மாவட்டம், அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர். டி. நாகராஜன், முதல்வர், காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி அவர்கள் துவக்க உரை ஆற்றினார்.

பின்னர் புதிய தலைமுறை அறக்கட்டளையின் தூத்துகுடி மாவட்ட கௌரவ அமைப்பாளர் எம். முருகேசன், அவர்கள் அறக்கட்டளையின் பணிகள் மற்றும் சுயதொழில் மன்றத்தின் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பம்சமாக சென்னையில் ஆகஸ்ட் 2018 இல் நடக்க போகின்ற சுயதொழில் கண்காட்சி, கருத்தரங்கம், கையேடு மற்றும் தமிழகத்தில் சுயதொழில் வாய்ப்புகள் குறித்த வண்ணப் போஸ்டரை, ஜி.பி. ஜோ பிரகாஷ், President, All India Chamber of Commerce and Industries, Thoothukudi, முனைவர். பி. மயில்வேல், Managing Director, Techsun Energies, Secretary General - All India Chamber of Commerce and Industries, Ms. ஜி. ஜெரினா பப்பி, Assistant Director, Government of India Ministry of Micro Small & Medium Enterpries, தூத்துக்குடி ஆகியோர் வெளியிட்டு சிறப்புரையாற்றினார்கள்.

"ஒரு நாட்டின் தேவை என்ன, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருள்/தொழில்நுட்பம் நம்மிடம் இருக்கிறதா, அதை அங்குள்ளவர்களிடம் எப்படி விற்பனை செய்வது?- இந்த மூன்று கேள்விகள்தான் ஏற்றுமதி/இறக்குமதி தொழிலின் முக்கியமான அடிப்படையைப் புரிந்துகொள்ள உதவும். இதற்கான விடைகளைக் கண்டுபிடித்துவிட்டால் போதும், ஏற்றுமதி/இறக்குமதி தொழிலுக்கு நீங்கள் தயாராகிவிடலாம்."

கே.எஸ். கமாலுதீன். மேலாண்மை இயக்குநர்
ப்ளூபாரத் எக்ஸிம் லிமிட்டெட், சென்னை

இந்த கருத்தரங்கில் K.S. கமாலுதீன், Managing Director, Bluebharath Exim Pvt, lTd, சென்னை அவர்கள் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புள்ள பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் வழிமுறைகள், ஏற்றுமதி வர்த்தகத்தின் அடிப்படைகள் சட்ட நடைமுறைகள், தடை செய்யப்பட பொருட்கள், வர்த்தக ஒப்பந்தங்கள், ஊக்க திட்டங்கள், சுங்கத்துறை நடைமுறைகள், நிஷிஜி, பொருளுக்கு பணம் பெறும் வழிமுறைகள், ஏற்றுமதி ஆணைகளை பெறும் வழிமுறைகள், இறக்குமதியாளரை அடையாளம் காணும் வழிமுறைகள், ஜி.எஸ்.டி, வரி, ஏற்றுமதி சந்தை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடியில் உள்ள உள்ள Indus Ind வங்கி அரங்கம் (STALLS) அமைத்து வங்கியின் கடன் திட்டங்கள், கடன் பெறும் வழிமுறைகள் மற்றும் நல்ல வருமானம் தரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் பார்வையாளர்களிடம் எடுத்துரைத்தார்கள்.

இக்கருத்தரங்கில் தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, புதுச்சேரி, தேனி, தஞ்சாவூர், சென்னை, விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் இருந்து 140க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.








மேலும் விபரங்களுக்கு : புதிய தலைமுறை அறக்கட்டளை

No. 24, ஜி.என்.செட்டி சாலை, சென்னை - 600 017 | அலைபேசி: 8754417500 / 8754417308

மின்னஞ்சல்: sm@ptfindia.org | வலை: www.microenterpries-ptf.org